# வேலைவாய்ப்பு பெருகும் : அன்னிய முதலீடு அதிகரிக்கும்

## தோகா வங்கி சிஇஓ சீதாராமன்

இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கும் வகையிலும், உள்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்தும் வகையிலும் பட்ஜெட் அமைந்து உள்ளதாக தமிழ்நாட்டை சேர்ந்தவரும் கத்தார் நாட்டின் தோகா வங்கி முதன்மை நிர்வாக அதிகாரி டாக்டர் சீதாராமன் கூறியுள்ளார்.

பட்ஜெட் குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது : கடந்த சில ஆண்டுகளாகவே இந்தியாவின் பொருளாதாரம் மந்தமாகி வந்த நிலையில் கடந்த 2013-14ல் இந்திய பொருளாதாரம் சற்றே மீண்டு 4.7 சதவீதமாக அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த தீவிரமான நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருவதே இதற்கு காரணம். இந்தியாவின் உற்பத்தித் துறை வளர்ச்சி சரிவால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் நிதி பற்றாக்குறை கவலை அளிக்கிறது. இதற்கு முந்தைய அரசு நிதி பற்றாக்குறையை 4.1 சதவீதமாக குறைக்க இலக்கு நிர்ணயித்தது. இந்நிலையில் புதிய அரசு 2016ம் நிதி ஆண்டில் 3.6 சதவீதமாகவும், 2017ம் நிதி ஆண்டில் 3 சதவீதமாகவும் குறைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. மத்திய அரசு அடுத்த 3 முதல் 4 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 முதல் 8 சதவீதம் வரை அடைய முயற்சி மேற்கொண்டுள்ளது. மேலும் இந்த ஆண்டுக்குள் சரக்கு மற்றும் சேவை வரியை (ஜிஎஸ்டி) அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.




பாதுகாப்புத் துறையில் அன்னிய முதலீடுக்கான உச்ச வரம்பு 26 சதவீதத்தில் இருந்து 49 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது, எனினும் பாதுகாப்புத் துறையில் கட்டுப்பாட்டு உரிமை இந்தியாவிடம்தான் இருக்கும். காப்பீடுத் துறையிலும் அன்னிய முதலீட்டு வரம்பு 49 சதவீதமாக்கப்பட்டுள்ளது. இது அந்த துறையில் பெரிய ஊக்குவிப்பை ஏற்படுத்துவதோடு, இந்திய காப்பீட்டு நிறுவனங்களை விரிவுபடுத்தவும், வெளிநாட்டு பங்குதாரர்கள் மூலம் அந்நிறுவனங்களுக்கு தேவையான மூலதனத்தை பெற உதவிடும். மேலும், 100 ‘ஸ்மார்ட் நகரம்’ உருவாக்க ரூ. 7 ஆயிரத்து 60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ரியல் எஸ்டேட் துறைக்கு புதிய திட்டங்கள் கிடைப்பதோடு, அத்துறையில் முதலீடுகளை அதிகரிக்கும் முயற்சியாக தேவையான சலுகைகளை வழங்கவும் அரசு முன் வந்துள்ளது. இதுதவிர, தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில சாலைகளுக்கு ரூ. 37 ஆயிரத்து 850 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது போக்குவரத்து துறைக்கு பெரிய உந்துதலை ஏற்படுத்தும். கிடங்குகள் கொள்ளளவை அதிகரிக்க ரூ. 5 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சாதாரண மனிதனுக்கு வருமான வரி உச்ச வரம்பு ரூ.2 லட்சத்தில் இருந்து 2.5 லட்சமாகவும், முதியோருக்கான வருமான வரி உச்ச வரம்பு ரூ.3 லட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. சேமிப்பை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, தனிநபர் சேமிப்புக்கான உச்ச வரம்பை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.1.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பட்ஜெட்டில் சுங்கம் மற்றும் கலால் வரியை அரசு மறுபரிசீலனை செய்துள் ளது. இதனால் டிவி, சோலார் பவர் யூனிட்ஸ், கம்ப்யூட்டர்ஸ், ஆயில் பொருட்கள், சோப் போன்ற பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும். ஒட்டுமொத்தமாக, உற்பத்தி துறையை புதுப்பிக்கும் விதமாகவும், புதிய உள்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்துவதாகவும் வலைவாய்ப்புகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கும் வகையில் பட்ஜெட் அமைந்துள்ளது.